*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# சபை மற்றும் அதன் நோக்கம் - 04
# முக்கியத்துவம் - வார்த்தையை பிரசங்கிப்பது

***2 தீமோத்தேயு 2:15, நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.***

*ஒரு போதகர்/தலைவர் சத்திய வார்த்தையை துல்லியமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.*

***யோவான் 17:17, உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.***

*ஏனென்றால், தேவனுடைய வார்த்தை மட்டுமே அவர்களை இயேசு கிறிஸ்துவைப் போல ஆக்கும்.*

***யோசுவா 1:8, இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்.***

*தேவனுடைய வார்த்தையை வாசிக்காமல் இருந்தால் ஆபத்து வரும்.*

***ஓசியா 4:1-6, இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை.***
***2. பொய்யாணையிட்டு, பொய்சொல்லி, கொலைசெய்து, திருடி, விபசாரம்பண்ணி, மிஞ்சி மிஞ்சிப்போகிறார்கள்; இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது.***
***3. இதினிமித்தம் தேசம் புலம்பும்; அதில் குடியிருக்கிற அனைவரோடுங்கூட மிருகஜீவன்களும் ஆகாயத்துப் பறவைகளும் தொய்ந்துபோகும்; கடலின் மச்சங்களும் வாரிக்கொள்ளப்படும். 4. ஆகிலும் ஒருவனும் நியாயத்தைக்காண்பிக்கவும், ஒருவனும் அவர்களைக் கடிந்துகொள்ளவும் கூடாது; உன் ஜனங்கள் ஆசாரியனோடே வழக்காடுகிறவர்களைப்போல இருக்கிறார்கள். 5. ஆகையால் நீ பகலிலே இடறிவிழுவாய்; இரவிலே உன்னோடேகூடத் தீர்க்கதரிசியும் இடறிவிழுவான்; உன் தாயை நான் சங்காரம்பண்ணுவேன். 6. என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.***

*அதேசமயம் பழைய ஏற்பாட்டின் மக்கள் தேவனுடைய வார்த்தையை கற்பிக்க தேவனால் கட்டளையிடப்பட்டனர்.*

***உபாகமம் 5:29, அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.***

***நெகேமியா 8:8, அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்.***

*அவர்கள் புரிந்துகொள்வதற்கும் கீழ்ப்படிவதற்கும் அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள்.*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை அது,*

***மத்தேயு 28:18-20, அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.***

***லூக்கா 11:28, அதற்கு அவர்: அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.***

***யோவான் 14:15, நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.***

*எனவே, தேவனுடைய வார்த்தை மட்டுமே அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் என்பதை தேவனுடைய மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.*

***சங்கீதம் 19:9-10, கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்***

***கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. 10. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.***

***சங்கீதம் 40:8, என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.***

*எல்லா ஆறுதலும், எல்லா ஊக்கமும், எல்லா ஊட்டச்சத்தும் - எல்லாம் தேவ வார்த்தையிலிருந்து தான் வருகிறது.*

***1 பேதுரு 2:1–3,***

***இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், 2. சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, 3. நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.***

*தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்கிறார்,*

***எபேசியர் 5:18–21, துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; 19. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, 20. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, 21. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.***

***கொலோசெயர் 3:16–17, கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; 17. வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.***

*ஊழியத்தில், வார்த்தையும் ஆவியும் பிரிக்க முடியாதவை.*

*தேவனுடைய வார்த்தையை எழுதும் படி மனிதனை கருவியாக உபயோகித்து அவர்களை ஏவினவர் ஆவியானவர்.*

***2 பேதுரு 1:20–21, வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. 21. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.***

*அவருடைய வார்த்தை ஒரு பட்டயம்.*

***எபேசியர் 6:17, இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.***

## அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு விளக்க செய்தியைக் கொடுக்கிறார்.

## 1. *Teacher கற்பிப்பவர்.*

***2 தீமோத்தேயு 2:2, அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.***

***அப்போஸ்தலர் 20:28, ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.***

*மற்றவருக்கு எல்லா ஞானத்துடனும் கற்பிப்பது ஒரு நபரை கிறிஸ்துவில் முழுமையடையக்கூடிய இடத்திற்கு கொண்டு வருகிறது.*

***தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்***

***எபிரேயர் 13:17, உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே.***

***கொலோசெயர் 1:27-29, புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக***

***உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். 28. எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம். 29. அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.***

## 2. *Soldier போர்ச்சேவகன்.*

***2 தீமோத்தேயு 2:3-4, நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. 4. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்.***

***2 கொரிந்தியர் 10,***
***எபேசியர் 6,***
***மனுஷரையல்ல தேவனை பிரியப்படுத்த வேண்டும்,***

***கலாத்தியர் 1:10, இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப் படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.***

***1 தெசலோனிக்கேயர் 2:4, சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.***

## 3. *Athlete* விளையாட்டு வீரர்,

***2 தீமோத்தேயு 2:5, மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்.***

***1 கொரிந்தியர் 9:27, மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.***

## 4. *Hard working farmer* கடினமாக உழைக்கும் விவசாயி,

***2 தீமோத்தேயு 2:6, பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்.***

*என்ன நடக்கும் என்று தெரியாமல் நீங்கள் விதைத்து பொறுமையாக இருக்க வேண்டும். பொறுமை முக்கியம்!*

***பேதுருவுக்கு ஆணையிடுதல்,***
*இயேசு உயிர்த்தெழுந்த பின் பேதுருவுக்கு ஒரே ஒரே கட்டளை தான் கொடுக்கிறார், பேதுருவை தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ளும் படி சொல்லுகிறார்.*

***யோவான் 21:15-17, அவர்கள் போஜனம்பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். 16. இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி:***

***யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்:என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். 17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.***

***மூன்று முறையும், என் ஆடுகளை மெய்ப்பாயாக என்று சொல்லுகிறார்!***
***1 பேதுரு 5:1-2, உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: 2. உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,***

*தேவ மந்தைக்கு உணவளிக்க வேண்டும்.*

*போதகருக்கு அது தான் வேலை,*

- *மீட்கப்பட்டவருக்கு,*
- *தெரிந்துகொள்ளப்பட்டவருக்கு மற்றும்*
- *தேவ மந்தைக்கு உணவளிக்க வேண்டும்.*

***எரேமியா 3:15, உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.***

***இந்த கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:***

1. *நீங்கள் தேவனுடைய வார்த்தையை விடாமுயற்சியுடன் படிக்கிறீர்களா?*
2. *தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் செய்தி அதன் போதனைகளை உங்களுக்கு வெளிப்படுத்துகிறதா?*
3. *உங்கள் வாழ்க்கையில் அந்த செய்திக்கு விசுவாசமாகவும் உண்மையுடனும் இருக்கிறீர்களா?*
4. *இந்த செய்தியை உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தியிருக்கிறீர்களா?*
5. *கூடுதல் போதகர்கள் மூலம் பயிற்றுபெறுவதிலும் , உருவாக்கப்படுவதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளீர்களா?*
6. *கர்த்தருடைய அழைப்பை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா, என்ன நடந்தாலும் போரில் சேர தயாராக இருக்கிறீர்களா?*
7. *சத்தியத்திற்கான போரை சந்திக்கும் போது உபத்திரவத்தை அனுபவிக்க நீங்கள் தயாரா?*
8. *நீங்கள் உலகத்திலிருந்தும் அதன் செயல்பாடுகளிலிருந்தும் விலகி உள்ளீர்களா? இதனால் நீங்கள் ஒற்றை எண்ணம் கொண்ட அர்ப்பணிப்பு பெறுவீர்கள்.*
9. *உங்கள் கவலை என்ன? மனிதனின் அங்கீகாரமா அல்லது கிறிஸ்துவின் அங்கீகாரத்தைப் பெறுவதா?*

10. நீங்கள் சுய ஒழுக்கமுள்ளவரா, விருப்பமுள்ளவரா, உங்கள் வாழ்க்கையை தேவனின் தரத்திற்கு இணங்கச் செய்ய முடியுமா?
11. அவரின் அங்கீரத்தை பெற நீங்கள் விருப்பமாக உள்ளீர்களா?
12. தற்போதைய வெகுமதியை விட எதிர்கால வெகுமதியால் நீங்கள் தூண்டப்படுகிறீர்களா?
13. உங்கள் கிரியை பற்றி தேவனிடம் கணக்கு ஒப்புவித்தல் மற்றும் கவனிக்கப்பட ஆயத்தமாக உளீர்களா?
14. பிழையோ புரட்டலோ இல்லாமல் அவருடைய வார்த்தையை கையாள நீங்கள் கவனமாக இருக்கிறீர்களா?
15. கொஞ்சம் பேசவும் அதிகம் படிக்கவும் உறுதியாக உளீர்களா?
16. நீங்களா தயாராக உள்ளீர்களா?
17. தவறான போதகங்களிலிருந்து உங்களை விலகி உள்ளீர்களா?
18. அவருடைய சித்தத்திற்கு உங்களை அர்ப்பணித்து உளீர்களா?
19. உங்களை என்ன நடந்தாலும் பரவ இல்லை என்ற அந்த ஆவியுடன் நீங்கள் இருக்கிறீர்களா?
20. உங்கள அழைப்பிற்கு உண்மையாக இருப்பீர்களா?